



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)



## ஸ்ரீ சங்கர ஜயந்தீ  மஹோத்ஸவம் சிறப்பு இதழ்

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ  ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்

Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை


கடவுள் சாஸ்வதமானவர். தேற்றும், இன்றும், நாளையும் ஒன்றுபோல் மாற்றமில்லாமல் இருப்பவர். எல்லா இடங்களிலும் இருப்பவர்,
ईशानो भूतभव्यस्य स एवाद्य उ श्वः | ஈஶானோ பூ⁴தப⁴வ்யஸ்ய ஸ ஏவாத்³ய உ ஶ்வ:


ஒவ்வொரு மனிதனும் அவர் மேல் பக்தி வைத்து. கீதை போன்ற சாஸ்த்ரங்களில் அவர் காட்டிய வழியில் வாழ்வதுதான் நல்லது. அவரைப் பல உருவங்களில் பூஜிக்கலாம். எல்லா உருவங்களும் அவருடையதுதான். அவர் பக்தனின் பக்தி விசேஷத்தைப் பொறுத்து அருளுகிறார். "எல்லா இடங்களிலும் வ்யாபித்திருக்கின்ற கடவுளை கோயிலில் மட்டுமே எதற்காக பூஜிக்கவேண்டும்? அவர் கோயிலில் மட்டுந்தான் தோன்றுவாரா?? என்று சிலருக்கு ஸந்தேஹமுண்டாகயாம்.

கடவுள் எல்லா இடங்களிலும் நிறைந்திருந்தாலும் அவருடைய ப்ரபாவம், ஸான்னித்யம் ஆகியவை. கோயிலிலுள்ள விக்ரஹத்திற்கு விசேஷமாக உள்ளது. கும்பாபிஷேகத்திற்குப் பிறகு பக்தனின் பக்தியை ஏற்றுக்கொள்ளும் சக்தி அந்த விக்ரஹத்திற்கு வந்துவிடுகிறது அதனால் அவர் மகிழ்ச்சியடைந்து பக்தனுக்கு அருள்பாளிக்கிறார். என்பதே இதற்கான பதின். இதைந்தாள் ஸ்ரீஆதிசங்கரபகவத்பாதர் தமது பாஷ்யத்தில் सर्वगतोऽपीश्वरस्तत्रोपास्यमान: प्रसीदति । ஸர்வக³தோ(அ)பீஶ்வரஸ்தத்ரோபாஸ்யமான: ப்ரஸீத³தி | सर्वगतस्यापि ब्रह्मण उपासनार्थ: प्रदेशविषपरिग्रहमे न विरुध्यते | ஸர்வக³தஸ்யாபி ப்³ரஹ்மண உபாஸனார்த²: ப்ரதே³ஶவிஷபரிக்³ரஹ்மே ந விருத்⁴யதே |என்று பல இடங்களில் விவரித்துள்ளார்.

ஆகையால் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கும் கடவுளை கோயிலில் வழிபடுவதில் தவறேதுமில்லை. மேலும்,
अर्चादावर्चयेत्तावदीश्वरं मां स्वकर्मकृत् ।
यावन्नवेद स्वहृदि सर्वभूतेष्ववस्थितम् ॥
அர்சாதா³வர்சயேத்தாவதீ³ஶ்வரம்’ மாம்’ ஸ்வகர்மக்ரு’த் |
யாவன்னவேத³ ஸ்வஹ்ரு’தி³ ஸர்வபூ⁴தேஷ்வவஸ்தி²தம் ||
என்று பகவானே பாகவதத்தில் கூறியுள்ளார்.

அதாவது எல்லா ப்ராணிகளிலும் இருக்கும் என்னை எதுவரை ஒருவன் தனது ஹ்ருதயத்தில் உணரவில்லையோ அதுவரை தனது கர்மாக்களை அனுஷ்டித்துக்கொண்டு ஈச்வரனான விக்ரஹம் போன்றவற்றில் அவகாசத்திற்கேற்றபடி பூஜிக்கவேண்டும் என்று பகவான் கூறியுள்ளார். இதை நன்றாகப் புரிந்துகொண்டு உருவமற்ற ஈச்வரனை உருவ வடியத்தில் பூஜை செய்து அவரது அனுகிரஹத்திற்கு பாத்திரர்களாகவேண்டும் என்று ஆசீர்வதிக்கிறோம்.
நன்றி - அம்மன் தரிசனம்





Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita
ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

# குரு பக்தி

(ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மகாஸ்வாமிகள் அவர்களின் வாழ்க்கையில் இருந்து சில துளிகள் )

நிகழ்வு : 1

ஸ்ரீமத் ஆசார்யார் ஸாதாரண மனிதர்களுடைய மனோநிலைக்கு வெகுதாரம் உயர்ந்த நிலையில் ஆனந்தமாக ரமித்துக் கொண்டிருந்தபடியால், தம்மைக் காணவந்தவர்களோடு ஸாமான்யமான லௌகிக விஷயத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும், அதன் தரத்தை உயர்த்தி அதிலிருந்தும் ஒரு தத்துவம் அறிவதற்கான வழியைக் காட்டுவார்கள். மிகவும் ஸாதாரணமான ஸம்பவத்திலிருந்துகூட அதிக அருமையானதும் உபயோகமுள்ளதுமான விஷயங்களை தெரிந்து கொள்ளுமாறு செய்வார்கள். அதை விளக்கும் உதாஹரணங்களைக் கூறும் முன்னர், அவர்களுக்கு ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யாரிடமும் தமக்கு குருநாதரான மஹாஸந்நிதானத்தினிடமும் (ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீமஹாஸ்வாமிகளிடமும்) இருந்த பக்தியைப் பற்றி சிறிது கூறுவது உசிதமென்று தோன்றுகிறது. அப்பெரியோர்களை ஞானிகள் என்று மாத்திரம் ஸ்ரீமத் ஆசார்யார் பாவிக்கவில்லை. ஈசுவரனே அவ்வுருவங்களில் தோன்றியதாகக் கருதினார். ஸாதாரணமாக யாவரும் அடிக்கடி சொல்லும்

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुर्गुरुर्देवो महेश्वरः ।
गुरुः साक्षात् परं ब्रह्म तस्मै श्रीगुरवे नमः ॥
கு³ருர்ப்³ரஹ்மா கு³ருர்விஷ்ணுர்கு³ருர்தே³வோ மஹேஶ்வர꞉ |
கு³ரு꞉ ஸாக்ஷாத் பரம்’ ப்³ரஹ்ம தஸ்மை ஸ்ரீகு³ரவே நம꞉ ||

என்ற பிரஸித்தமான சுலோகத்திற்கு குருவை பிரஹ்மா, விஷ்ணு, மஹேசுவரர், பரப்ரஹ்மம் இவர்களுக்கு ஸமானமென்று ஸ்தோத்திரம் செய்யவில்லை, இவர்களுக்கும் குருவிற்கும் பேதம் கிடையாது, குருவே அவர்கள், என்றுதான் தாத்பர்யம் என்பது ஸ்ரீமத் ஆசார்யாரின் அபிப்பிராயம். இந்த தத்துவத்தை யாரும் ஒருக்காலும் மறந்துவிட இடம் கொடுக்க மாட்டார்கள்.

ஒரு ஸமயம், மேலான உத்தியோகத்திலிருந்த ஒரு கனவான் சிருங்கேரிக்கு வந்து அங்குள்ள நிலைமைகளை பார்த்துவிட்டு தனக்கேற்பட்ட ஸந்தோஷத்தை ஸ்ரீமத் ஆசார்யாரிடம் தெரிவித்தார்.

கனவான்: என்ன அற்புதமான காட்சி! காடுகளுக்கும் மலைகளுக்கும் நடுவில் இவ்விடம் வெகு அழகாக அமைந்திருக்கிறது. துங்காநதியின் ஜலம்தான்

எவ்வளவு பரிசுத்தமாகவும் பளிங்குபோல் தெளிவாகவும் இருக்கின்றது? இக்காலத்தில் புகை வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் இருப்பதால் இம்மனோஹரமான ஸ்தலத்தின் அழகைக்காண இங்கு எளிதாக வந்துவிட முடிகின்றது. நமது ஆதி ஆசார்யார் காலத்தில் இத்தகைய ஸௌகர்யங்கள் யாதொன்றும் இல்லை. கால்நடையாகவே நமது நாடு முழுவதும் ஸஞ்சாரம் செய்திருக்கிறார். இவ்வளவு மனோஹரமான இடம் இங்கு இருக்கிறதென்று எவ்வாறு கண்டுபிடித்தாரென்பதைப் பற்றி நினைக்கும் போது அவரை மெச்சி மகிழ்ந்து ஆச்சர்யத்தால் மெய்மறந்து விடுகிறேன்.

மஹாஸந்நிதானம்: உலகத்தை ஸ்ருஷ்டி செய்த பகவானுக்கு, தாம் ஸ்ருஷ்டி செய்திருக்கிற பதார்த்தங்கள் எங்கே இருக்கின்றனவென்று கண்டு பிடிப்பதற்குத் தேடி அலைய வேண்டிய அவசியமுண்டா? எது எங்கே உள்ளது என்பதை இயல்பாகவே அவர் அறியாரா? அவர்தானே அதை அங்கே வைத்தது? ஆகையால் ஸ்ரீமத் பகவத் பாதாசார்யார் இதை தகுந்த உத்தமமான ஸ்தல மென்று குறிப்பிட்டு எடுத்துக் கொண்டதில் ஆச்சர்யப்படுவதற்கு ஒன்று மில்லையே. ஈசுவரன்தான் ஆசார்யாராக அவதரித்திருக்கிறார் என்பதை மறந்தோ, அவரும் நம்மைப்போல் ஸாதாரண மனிதன் என்று நினைத்தோ இருந்தாலொழிய, அவர் செய்திருக்கும் அரும்பெரும் செயல்களில் ஆச்சர்யப்படுவதற்கோ, வியப்புறுவதற்கோ இடமில்லை.



நிகழ்வு : **2**

ஒரு வருஷம் ஸ்ரீசங்கர ஜயந்தீ மஹோத்ஸவ ஸமயத்தில் வித்வான்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர். அப்போது ஸ்ரீமத் ஆசார்யார் ஒரு பண்டிதரைப் பார்த்து, பிரஹ்மஸூத்திரத்தில் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி வாக்கியார்த்தம் சொல்லும்படி ஏவினார்கள். அப்பண்டிதரும் அழகாகவே பிரவசனம் செய்யும் போது, அந்த ஸந்தர்ப்பத்தில் பிரதிபாதனம் செய்வதற்காக எடுத்துக்கொண்ட விஷயத்தை ஸமர்த்தனம் செய்வதற்காக தானாக புதிதாக ஒரு ஹேதுவை சேர்த்துக் கூறினார்.

மஹாஸந்நிதானம்: இந்த ஹேது நம் ஆசார்யார் பாஷ்யத்தில் இருக்கிறதோ?

பண்டிதர்: இல்லை.

மஹாஸந்நிதானம்: இல்லையானால், அதை நீங்கள் சொன்னதற்கு தாத்பர்யம்?

பண்டிதர்: எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு பக்கபலமாயிருந்து உதவுமென்று சொன்னேன்.

மஹாஸந்நிதானம்: நமது ஆசார்யார் இந்த ஹேதுவை சொல்லத் தவறிவிட்டார் என்று உங்கள் எண்ணமா?

பண்டிதர்: அவர்கள் இதையும் சேர்த்திருக்கலாமென்று தோன்றிற்று.

மஹாஸந்நிதானம்: சேர்த்திருக்கலாம் மாத்திரம் இல்லை, சேர்த்திருக்க வேண்டியதுண்டு என்றே உங்கள் அபிப்பிராயம்.

பண்டிதர்: நான் அவ்விதம் சொல்லவில்லை.

மஹாஸந்நிதானம்: வியக்தமாக அவ்விதம் சொல்லவில்லை யென்பது வாஸ்தவம். ஆனால் இந்த ஹேதுவையும் ஆசார்யார் சேர்த்திருந்தால் அவர்களுடைய பாஷ்யம் இன்னும் அழகாகவும் பூர்ணமாகவுமிருக்கும் என்பதே உங்கள் எண்ணம்.

பண்டிதர்: நான் அப்படி நினைத்ததுண்டு.

மஹாஸந்நிதானம்: அதாவது, இந்த ஹேதுவையும் சேர்த்து பாஷ்யத்தை பரிஷ்காரம் செய்ய முயன்றீர்கள்.

பண்டிதர்: இல்லை, இல்லை. அவ்விதம் நான் முயன்றால் அது பெரிய அபசாரமேயாகும்.

மஹாஸந்நிதானம்: எப்படியும் இவ்வித எண்ணம் தங்கள் மனஸில் உள்ளூர உங்களுக்குத் தெரியாமலேயே இருந்திருக்க வேண்டும். இல்லையானால் புதியதான ஒரு ஹேதுவை சொல்லியிருக்க மாட்டீர்கள்.

பண்டிதர்: நான் செய்தது இவ்வித அபிப்பிராயத்திற்கு இடம் கொடுக்குமானால், நான் அவ்விதம் செய்ததற்கு வருந்துகிறேன்.

மஹாஸந்நிதானம்: அது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். புதிதாக. ஒரு ஹேதுவை சொல்லிவிட்டீர்கள். அது எவ்வளவு தூரம் எடுத்துக்கொண்ட விஷயத்திற்குப் பொருத்தமாயிருக்கிறது என்று பார்ப்போம்.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

இவ்விதம் சொல்லிவிட்டு ஸ்ரீமத் ஆசார்யார் அந்த ஹேதுவை அலசியெடுத்து, அது கொஞ்சமேனும் பொருத்தமில்லையென்பதை எடுத்துக்காட்டினதுடன், எடுத்துக்கொண்ட விஷயத்தை ஸமர்த்தனம் செய்வதற்குப் பதிலாக நேர் விரோதமாகவும் இருக்கிறதென்பதை சில நிமிஷங்களில் நிரூபித்துக் காட்டினார்கள். அந்தப் பண்டிதரும் தன் தவறை உணர்ந்தார்.




பண்டிதர்: நான் மிகவும் வருந்துகிறேன். நான் சொன்ன ஹேது பொருத்தமில்லை யென்பதை நன்கு உணர்கிறேன்.


மஹாஸந்நிதானம்: நீங்கள் வருத்தத்தை தெரிவிக்க வேண்டு மென்பதிலாவது, என்னுடைய வாத சக்தியை விளம்பரப்படுத்துவதிலாவது, நான் எடுத்துக் காட்டியதற்கு தாத்பர்யம் இல்லை. ஸர்வக்ஞனான பகவானுடைய அவதாரமாகிய ஆசார்யார் ஏதேனும் ஒரு விஷயத்தில் தவறக்கூடும் என்றாவது, அல்லது அவசியமாய் சொல்ல வேண்டிய ஏதேனும் அம்சத்தை சொல்லவிட்டிருக்கக்கூடும் என்றாவது மனதில் எள்ளளவு சந்தேகம் இருப்பினும், அதை நீக்கிவிட வேண்டும் என்பதில் தான் என் கருத்து. உண்மையில் அவர் யார் என்பதை மறந்தால் தான் அவர் சொல்லியிருப்பதை பரிஷ்காரம் செய்யலாம் என்ற எண்ணம் எழக்கூடும். அவரும் நம்மைப்போல் ஒரு வித்வான் தானே என்று நினைக்கத் தோன்றிவிடுகிறது. அவ்வித எண்ணத்தை அறவே விட்டுவிட வேண்டும்.

நிகழ்வு : **3**

சிரத்தையுள்ள சிஷ்யர் ஒருவர் பிரதி தினம் செய்யும் ஜப விஷயமாக ஏற்படும் ஒரு ஸந்தேஹத்தை நிவிருத்தி செய்து கொள்ளக் கருதி ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்தார்.

சிஷ்யர்: எனக்கு வெவ்வேறு தேவதைகளுக்குரிய மந்திரங்கள் உபதேசமாயிருக்கின்றன. அந்தந்த தேவதைக்கு தனித்தனியாக தியான சுலோகங்கள் இருக்கின்றன. அந்த சுலோகங்களில் வர்ணிக்கப்படும் சில தேவதைகளின் உருவம் ரம்யமாகவுமில்லை, மனதினால் கற்பிக்க முடியாமலுமிருக்கிறது. மிகவும் சிரமப்பட்டு அவ்வுருவத்தை தியான சுலோகத்தில் சொல்லியபடி கல்பித்து விட்டாலும், அது விலக்ஷணமாகவும், விகாரமாகவும் தோன்றுகிறது. ஐந்து தலைகளும் பத்து கைகளும் உள்ள உருவம் எப்படி இருக்கும் ? மேலும் இவ்விதம் சிரமப்பட்டு கல்பிக்கப்பட்ட மூர்த்தியை









மனக்கண் முன்னால் ஒரு க்ஷணத்திற்குமேல் நிறுத்தி வைக்கவும் முடியவில்லை. ஒரு ஜபத்தை முடித்துக் கொண்டு மற்றொரு ஜபத்தை ஆரம்பிக்கும்போது, முன் ஜபகாலத்தில் கல்பித்த உருவத்தை மாற்றி வேறு உருவத்தை கல்பித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்வதில் மிக்க சிரமம் ஏற்படுகிறது. நான் எவ்வளவு சிரத்தையோடு ஜபத்தை செய்ய நினைத்தாலும் இவ்வித சிரமங்கள் ஏற்படுவதால் ஜபமே சிரமமாகத் தோன்றிவிடுகிறது.

மஹாஸந்நிதானம்: ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு ஒரு குறிப்பிட்ட பலனை உத்தேசித்து ஒரு குறிப்பிட்ட தேவதா விஷயமான ஜபத்தை செய்கிறீரா? அப்படியானால் அந்த சிரமத்தை எடுத்துக்கொண்டுதான் தீரவேண்டும். தியான சுலோகத்தில் வர்ணித்திருக்கிறபடியே தான் அந்த தேவதையின் ரூபத்தை தியானம் செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

சிஷ்யர்: அப்படி விசேஷமான நோக்கம் எனக்கு ஒன்றுமில்லை.

மஹாஸந்நிதானம்: அதாவது, சித்தம் சுத்தமாக வேண்டும், ஈசுவரனுடைய பிரஸாதம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கங்களைத் தவிர வேறு நோக்கம் இல்லை.

சிஷ்யர்: அவ்விதம்தான்.

மஹாஸந்நிதானம்: அப்படியானால், ஒவ்வொரு மந்திரத்திற்குமுரிய தேவதையின் ரூபத்தை மனதில் கல்பித்துக் கொள்ளவேண்டிய சிரமம் உங்களுக்கு வேண்டாம்.

சிஷ்யர்: தியான சுலோகங்களைச் சொல்லவே வேண்டாமென்று தாத்பர்யமா?

மஹாஸந்நிதானம்: அப்படியல்ல, தியான சுலோகங்களை சொல்லத்தான் வேண்டும்.

சிஷ்யர்: தேவதையின் உருவத்தை மனக்கண் முன்னால் நிறுத்திக்கொள்ளாமல் தியான சுலோகத்தை மட்டும் உச்சரிப்பதில் என்ன பயன்?

மஹாஸந்நிதானம்: தியானத்திற்கு மூர்த்தி வேண்டாமென்று நான் சொல்லவில்லையே?

சிஷ்யர்: தியானத்திற்கு மூர்த்தி அவசியம், ஆனால் தியான சுலோகத்தில் சொன்னபடி இருக்க வேண்டாம் என்றால் மந்திரத்திற்கும் மூர்த்திக்கும் மாறுபாடோ, முரண்பாடோ ஏற்படாதா?

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)



மஹாஸந்நிதானம்: நீங்கள் மனக்கண் முன் நிறுத்திக் கொள்ளும் மூர்த்திக்குள் அந்த தேவதையும் அடங்கியிருந்தால் அவ்விதம் ஏற்படாது.

சிஷ்யர்: எல்லா தேவதைகளையும் தம்மிடம் அடக்கியுள்ள பகவானுடைய விசுவரூபத்தை தியானமூர்த்தியாக வைத்துக் கொள்ளலாமென்று அபிப்பிராயமாயிருந்தால், அவ்வுருவத்தை கல்பிப்பது இன்னும் அதிக கடினமாகவல்லவா இருக்கும்? மேலும் அத்தகைய உருவம், அர்ஜுனன் கண்ட மாதிரி, பிரமிக்கத் தக்கதாகவும் பயங்கரமாகவும் இருக்குமாதலால், பக்தனின் மனதில் கொஞ்ச நேரமாவது நிலைத்துநிற்கக் கூடியதாக ரம்யமாக இருக்காது.

மஹாஸந்நிதானம்: வாஸ்தவம். விசுவரூப மூர்த்தியை கல்பித்துக் கொள்வதும் கஷ்டம்; கல்பித்தாலும் மனோஹரமாக இராது. அவ்விதமான மானஸிக மூர்த்தியை நான் சொல்லவில்லை.

சிஷ்யர்: அப்படியானால் எவ்வித தியான ரூபத்தை சொன்னதாக நான் அறிந்து கொள்ள வேண்டும் ?

மஹாஸந்நிதானம்: சிறிது நேரமாவது மனதில் நிற்கக்கூடியதாக மூர்த்தி இருக்க வேண்டுமானால், அம்மூர்த்தி கல்பிப்பதற்கு ஸுலபமாயிருக்க வேண்டும், மனதிற்கு ரம்யமாகவும் இருக்க வேண்டுமென்று சொன்னீர்களல்லவா?

சிஷ்யர்: ஆம்.

மஹாஸந்நிதானம்: புதிதாக கல்பிக்கப்பட வேண்டிய சிரமமேயில்லாமல், ஏற்கெனவே இருப்பதாயிருந்தால், இன்னும் அனுகூலமல்லவா?

சிஷ்யர்: அதற்கென்ன ஸந்தேஹம்?

மஹாஸந்நிதானம்: மேலும் அவ்வுருவத்தை நாமாக ரம்யமாகச் செய்வதற்கு அவசியமில்லாமல், அதுவே இயற்கையிலேயே ரம்யமாக அமைந்து விட்டால், இன்னும் நல்லதுதானே?

சிஷ்யர்: ஆமாம்.

மஹாஸந்நிதானம்: நீங்கள் சொன்ன சிரமங்கள் எல்லாம் வெகு காலத்திற்கு முன் ஜீவித்திருந்தவர்களுக்கு இருந்திருக்கலாம். நமக்கு அவ்வித சிரமங்கள் வேண்டியதில்லை.

சிஷ்யர்: எப்படி?

மஹாஸந்நிதானம்: நமக்கு முன் இருந்த மஹாஸந்நிதானத்தை தரிசித்திருப்பீர்கள் இல்லையா?

சிஷ்யர் : ஆம், தரிசித்திருக்கிறேன்.

மஹாஸந்நிதானம்: அவர்களை ஒரே ஒரு தடவை தரிசித்திருந்த போதிலும் அவர்கள் ரூபம் உங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கும். நினைத்துப் பார்த்தால் ஸுலபமாக உங்கள் மனக்கண் முன் நிற்கக்கூடிய முறையில் பதிந்திருக்கும்.

சிஷ்யர்: வாஸ்தவம்.

மஹாஸந்நிதானம்: அவர்களுடைய ரூபம் மிகவும் கவர்ச்சிகரமான தென்பதை நீங்களும் ஒத்துக் கொள்வீர்கள். இப்பொழுதும் அம்மூர்த்தியை நம் மனக்கண் முன் நிறுத்துவதில் உண்மையான தனி ஆனந்தம் ஏற்படுகிறதென்பதையும் ஒப்புக் கொள்வீர்கள்.

சிஷ்யர்: அப்படியேதான்.

மஹாஸந்நிதானம்: மனதில் வருத்திக் கொள்வதில் சிரமமில்லாமை, மனோஹரத்தன்மை என்ற இரண்டு அம்சங்களும் நீங்கள் வேண்டுமென்று சொன்னீர்கள். அவ்விரண்டும் இம்மூர்த்தியில் இருக்கின்றன. மனதை சிரமப்படுத்தி புதிதாக ஓர் உருவத்தை கல்பித்துக்கொண்டு, அதை ரம்யமாகச் செய்துகொள்ளவேண்டிய கார்யமேயில்லை. நீங்களே நேரில் தரிசித்திருக்கிற மூர்த்தி, ஒருவர் மற்றொருவருக்கு எவ்விதங்களிலெல்லாம் ரம்யமாக இருக்கலாமோ அத்தனை விதங்களிலும் கவரக்கூடிய மூர்த்தி; இவ்விதமாக அம்மஹானுடைய மூர்த்தியானது உங்களுக்கு ஸித்தமாகவே இருக்கிறது.

சிஷ்யர்: சிவனைக் குறித்தோ விஷ்ணுவைக் குறித்தோ ஜபம் செய்யும்போது, முன் மஹாஸந்நிதானத்தின் உருவத்தை மனதில் நிறுத்திக் கொண்டால், முரண்படாதா?

மஹாஸந்நிதானம்: ஏன் முரண்பட வேண்டும்?

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुर्गुरुर्देवो महेश्वरः ।
गुरुः साक्षात् परं ब्रह्म तस्मै श्रीगुरवे नमः ॥

என்ற சுலோகத்தில் குருதான் பிரஹ்மா, குருதான் விஷ்ணு, குருதான் மஹேசுவரர். குருதான் ஸாக்ஷாத் பரப்ரஹ்மம் என்று சொல்லப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். பரப்ரஹ்மமே குருதான் என்று இருக்கும்போது அந்த பரப்பிரஹ்மத்தில் தோன்றிய எல்லாவித பரிச்சின்னமான வியக்திகளும் குருவினிடத்தில் அடக்கமென்பது அவசியம்தானே? ஆகையால் ஒரு குறிப்பிட்ட தேவதையின் தியான சுலோகத்தையோ மந்திரத்தையோ சொல்லும்போது குருமூர்த்தியை உங்கள் முன் நிறுத்திக் கொள்வதில் எவ்வித முரண்பாடும் கிடையாது. அந்த தேவதையும் குருவின் ஸ்வரூபத்தில் சேர்ந்து அடங்கியுள்ளது தானே?



சிஷ்யர்: எந்த மந்திரத்தை ஜபித்தாலும் குருமூர்த்தியை தியானம் செய்யலாமென்றுதானே நான் அறிந்து கொள்ள வேண்டும்?

மஹாஸந்நிதானம்: அப்படியேதான். ஏன் அப்படிச் செய்யக்கூடாது? அடுத்த மந்திரத்தின் தேவதையும் அந்த குருமூர்த்தியில் அடக்கமாயிருக்கும்போது, தியான மூர்த்தியை மாற்றுவதற்கு என்ன அவசியம் ? பசுவினிடத்திலும் பிராஹ்மணரிடத்திலும் எல்லா தேவதைகளும் அடங்கியுள்ளார்கள் என்று சொல்லுகின்றன. நம் குருநாதர், ஸாதாரண ரீதியில் சாஸ்திரங்கள் கவனித்தாலும்கூட, பிராஹ்மணர்களுக்குள் உத்தமர், உத்தமமான ஆசிரமத்தில் இருந்தவர், உத்தமமான ஆசார்ய பீடத்தில் இருந்தவர், ஆத்ம ஸாக்ஷாத்காரத்திலும் உத்தமமான நிலையை அடைந்தவர். அப்பேர்ப்பட்ட குருநாதரிடத்தில் ஸகல தேவதைகளும் உள்ளடங்கியே இருக்கிறார்கள் என்பது ஏற்படவில்லையா? எந்த தேவதைக்குப் பதிலாகத்தான் அவர்களை வைத்துக் கொள்ளக் கூடாது?

நிகழ்வு : **4**

மேலே குறிப்பிட்ட முந்தின ஆசார்யாரான ஸ்ரீ ஜகத்குரு ஸச்சிதானந்த சிவ அபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளோடு நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்று பால்யம் முதலே ஸ்ரீமடத்தின் ஸேவையில் ஈடுபட்டிருந்த பிரஹ்மஸ்ரீ ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் அம்மஹானுடைய சரித்திரத்தை கன்னட பாஷையில் எழுதியிருக்கிறார். அதன் தமிழ் பதிப்பை ஸ்ரீமத் ஆசார்யார் வாசிக்கச் சொல்லி

கேட்டுவரும்போது ஒரு நாள் ஸாயங்காலம் வாசிக்கையில், முந்தின ஆசார்யார் யோகாப்பியாஸத்தில் ஒரு நிலைவரை நன்கு தேர்ச்சி பெற்றிருந்ததாகவும் அந்த மார்க்கத்தில் அந்நிலைக்குமேல் போனதாகத் தெரியவில்லையென்றும் எழுதியிருந்த கட்டம் வாசிக்கப்பட்டது. அதை வாசித்தவுடன் ஸ்ரீமத் ஆசார்யார் "மிகவும் வாஸ்தவம். மேல்போனதாகத் தெரியவில்லை. புஸ்தகம் எழுதினவருக்கு, மேல்போனதாகத் தெரியவில்லை" என்று அழுத்திச் சொன்னார்கள். எழுதியிருப்பது சரியில்லையென்று சொல்வதில் ஆசார்யாருக்கு இஷ்டமில்லை. ஆனால் அதுவே முடிவான வார்த்தையென்று விட்டுவிடவும் இஷ்டமில்லை. இவ்வாக்கியத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மஹாஸந்நிதானம் யோகத்தில் அதற்குமேல் போகவில்லையென்ற தீர்மானத்திற்கு வந்துவிடுவதிலும் இஷ்டமில்லை. ஆகையால், இச்சிறு வார்த்தையினால் புஸ்தகம் எழுதினவருக்கு இவ்விஷயமாக பூர்ணமான ஞானமில்லை யென்பதையே சுட்டிக் காட்டினார்கள். குருநாதருடைய யோகஸித்திகளில் ஏதேனும் குறையிருக்கலாம் என்ற ஸந்தேஹத்தைக்கூட ஸஹிக்காதவர் ஸ்ரீமத் ஆசார்யார்.

நிகழ்வு : **5**

ஒரு நாள் மாலை ஸ்ரீமத் ஆசார்யார் பகவானுடைய அவதாரங்களைப்பற்றி பிரஸ்தாபிக்க ஏற்பட்டபோது ஸ்ரீ கிருஷ்ணரைப்பற்றிச் சொல்லிக்கொண்டு சொன்னதாவது- மேலால்

"ஸ்ரீ ராமர் தர்மத்தை அனுஷ்டித்துக் காட்டுவதோடு நின்றுகொண்டு, வித்தியார்த்தி போல் நடந்து கொண்டாரே தவிர, ஆசார்ய ஸ்தானம் வஹிக்கவில்லை. ஸ்ரீ கிருஷ்ணர் ஆசார்யாராகவும் இருந்தார். பிரவிருத்தி தர்மம் என்ற தர்ம மார்க்கத்தையும், நிவிருத்தி தர்மம் என்ற ஞான மார்க்கத்தையும் உபதேசித்தார். நிவிருத்தி மார்க்கத்தைப் பற்றிச் சொல்லும்போது, எந்த ஸம்பவம் ஏற்பட்டாலும் தந்நிலை வழுவாமல் மனதை அவ்வித ஸமநிலையில் நிறுத்துவதின் அவசியத்தை வற்புறுத்தினார். ஆகும் ஸாக்ஷாத்காரம் ஸமபுத்தியுள்ளவர் என்று வர்ணித்திருக்கிறார். தம்மையும் அடைந்த மஹானே அப்படியே ஸமபுத்தியுள்ளவராக வர்ணித்துக் கொண்டிருக்கிறார்.

समोऽहं सर्वभूतेषु न मे द्वेप्योऽस्ति न प्रियः ॥
ஸமோ(அ)ஹம்' ஸர்வபூ$^4$தேஷு ந மே த்$^3$வேப்யோ(அ)ஸ்தி ந ப்ரிய: ||

"நான் எல்லாப் பிராணிகளிடத்திலும் ஸமமானவன். எனக்கு துவேஷிக்கத்தக்கவன் யாரும் கிடையாது. எனக்குப் பிரியமானவனும் யாரும் கிடையாது'. ஆனால் க்ஷத்திரிய ஜாதியில் பிறந்து, கிருஹஸ்தாசிரமத்தில் இருந்துகொண்டு, வெறுப்பு விருப்பங்களுக்குரிய விஷயங்கள் அடங்கிய உலகத்தின் மத்தியில் இருக்கும்போது, தாம் சொன்ன உத்தம நிலையை தம்மாலேயே அனுஷ்டித்துக் காட்ட முடியவில்லை. கீதையிலேயே அடிக்கடி

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

பக்தன் எனக்குப் பிரியமானவன் என்று சொல்லும்படி ஏற்பட்டது.அர்ஜுனனைப் பார்த்தும், "நீ எனக்கு இஷ்டன்" "நீ எனக்குப் பிரியன்" என்றெல்லாம் சொல்லும்படி இருந்தது. பகவானால் உபதேசிக்கப்பட்ட லக்ஷ்யநிலை அனுஷ்டானத்திற்கு கொண்டு வரக்கூடியதே இல்லையென்று எண்ணம் ஏற்பட்டுவிடக் கூடாதென்று நினைத்து, பிராஹ்மணராகப் பிறந்து ஸந்யாஸ ஆசிரமத்தை ஸ்வீகரிப்பதென்று தீர்மானித்துக் கொண்டார். அப்படி செய்தால்தான் கீதையில் கண்ட லக்ஷ்யத்தை தாமே அனுஷ்டித்துக் காட்ட முடியும் என்ற தீர்மானத்துடன் இவ்வுலகில் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாராக அவதரித்தார். ஆனாலும் அப்பொழுதும் அநேக அவைதிக மதங்களைக் கண்டிக்கவும், அம்மதவாதிகளை தம் வாதத்தினால் ஜெயிக்கவும், ஸுதன்வா என்ற ராஜனின் ஸஹாயத்தைக் கொண்டு அவர்களை சிக்ஷிக்கவும் அவசியம் ஏற்பட்டது. இதன் விளைவாக அநேகம் பக்தர்களும் அநேகம் பகைவர்களும் ஏற்பட்டார்கள். ஆகையால், அப்பொழுதும்கூட சாஸ்திரத்தில் சொல்லிய லக்ஷ்ய நிலை ஸாதிக்கத் தகுந்ததுதான் என்று பூர்ணமாக அனுஷ்டானத்தில் காட்டமுடியாமல் போய்விட்டது."

"அந்நிலை அனுஷ்டானத்தில் ஸாத்தியம்தான் என்று உலகுக்கு தெரிவிப்பதற்காகவே அப்பகவான் மறுபடிநம் குருநாதர் ரூபத்தில் மனுஷ்யனாக அவதரித்தார். அவர் சாந்தியும் ஆனந்தமும் மூர்த்திகரித்தவர். அவர் மனிதர் மிருகம் யாவரையும் கவர்ந்தார். அனைவருக்கும் பிரியமாயிருந்தார். அவர் எல்லாரிடமும் ஒரே மாதிரி ஸ்நேஹபாவம் வைத்திருந்தபடியால், அவருக்கு சத்ரு என்பதும் கிடையாது, நண்பர் என்றும் இருந்ததில்லை. அவரை தரிசிக்க நேர்ந்த எவரும் தானே அந்த மஹானுடைய விசேஷமான பிரீதிக்குப் பாத்திரம் என்று எண்ணிக் கொள்வார்கள். எத்தரத்தாரும் இப்படியே அவரைப் பற்றி நினைத்து வந்ததால், அவர் எல்லா பிராணி வர்க்கங்களிலும் தம்மையே பேதமன்னியில் பார்க்கும் ஸர்வாத்ம பாவம் என்ற நிலையடைந்திருந்தார் என்றே சொல்ல வேண்டும். அவர் எப்பொழுதும் எல்லாவற்றுடன் ஒன்றாகவே இருந்துவந்தவர். தம்முடைய பெருக்கெடுத்துப் பிரவஹிக்கும் அன்பினாலும் அனுக்ரஹத்தினாலும் அந்த ஐக்யத்தை உலகுக்கு காட்டினார் என்பதே நன்கு பொருத்தமாயிருக்கும். இவ்வம்சத்தை கவனிக்கும்போது, முன் அவதாரங்களைவிட நம்மிடையே இவர் செய்த அவதாரம் மிகவும் உபகாரமுள்ளதென்றும், தத்துவத்தை போதிக்கக் கூடியதென்றும், ஊக்கமளிக்கக் கூடியதென்றும் சொல்லலாம்".

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்